விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 23 ஜுல்ஹஜ் 10 இதழ் 237
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9 10-1981

## குட்டிமணியை பார்வையிட சட்டத்தரணிகளுக்கு அனுமதி

(கொழும்பு)

குட்டிமணி எனப்படும் யோகச்சந்திரனை சட்டத்தரணிகள் வாரத்தில் ஒருமுறை சந்திப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

சனிக்கிழமை தோறும், பகல் 2-30 முதல் 5-30 வரை பனகொடை இராணுவ முகாமில் குட்டிமணியின் சட்டத்தரணிகள் சந்திக்கலாம்.

சட்டத்தரணி விவேகானந்தன் உட்பட பதினொரு சட்டத்தரணிகளுக்கு மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தரணிகள் குட்டிமணியுடன், தங்கவேல், தேவன், சிவபாதம், யோகராசா, விமலராசா, தர்மலிங்கம், சரவணை முருகையா, சிவச்செல்வம், நிக்கலஸ் ஆகியோரை இராணுவ முகாமில் குறிப்பிட்ட தினத்தில் பார்வையிடவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ஜேசுதாஸனும் விடுதலை

கொழும்பு

யாழ். பல்கலைக்கழக மாணவன் ராஜா மாரகிங்க கொலை முயற்சி வழக்கின் முதலாவது எதிரியான ஜோன் ஜேசுதாசன் நேற்று விடுதலை செய்யப்பட்டார். ஏற்கனவே இவ்வழக்கின் 2-வது எதிரி இ. ஆயாகரன் செவ்வாய்க்கிழமை விடுதலையானர். (ம)

# ஜனாதிபதி, மந்திரி உறுதிகூறியும் புத்தர்சிலை அகற்றப்படவில்லை!

## பிற இன, மத மக்களின் பொறுமையை சோதிக்கும்செயல்என்கிறர் வவனியாசிவா

[வவனியா நிருபர்]

“வவனியா கச்சேரிச்சந்தியில் கடந்த ஆகஸ்ட் மாதம் எவருடைய அனுமதியுமின்றி வைக்கப்பட்ட புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்படும் என்று ஜனதிபதியும் கலாசார அமைச்சரும் உறுதி அளித்துள்ளபோதிலும் இன்னும் அச்சிலை அகற்றப்படவில்லை. இதேவேளையில் குறிப்பிட்ட ஒரு சிலர் பொலிஸ் காவலுடன் இச்சிலையை வழிபாடுசெய்கின்றனர். இது இங்கு வாழுகின்ற ஏனைய இன, மத மக்களின் பொறுமையைச் சோதிக்கும் செயலாக அமைகின்றது.’

இவ்வாறு வவனியா எம்.பி. திரு. ரி சிவசிதம்பரம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

“இப்புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக ஜனதிபதிக்கும் கலாசார அமைச்சருக்கும் பல முறை முறையீடு செய்யப்பட்டது.

“கடந்தமாதம் 29ம் திகதி வவனியா கச்சேரியில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் கலந்துகொண்ட கலாசார அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருள்ளே [illegible] இராணுவ, பொலிஸ், பௌத்த, இந்து, கத்தோலிக்கப் பிரதிநிதிகள் மத்தியில், குறிப்பிட்ட புத்தர் சிலை உடனடியாக அகற்றப்படுமெனப் பகிரங்கமாக அறிவித்தார்.

“அதேமாதம் 23ம் திகதி அச்சிலையை அகற்றி அரசாங்க அதிபர் பொறுப்பில் வைக்குமாறு கலாசார அமைச்சிலிருந்து கடிதம் மூலம் உத்தரவிடப்பட்டது.

“மறுநாள் 24ம் திகதி அந்த நடவடிக்கையைப் பின்போடும்படி அமைச்சிலிருந்து இன்னுமொரு அறிவித்தல் வந்ததாக அறிய வந்தது.

“இதேசமயம், இம்மாதம் 5ம் திகதி இவ்விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும் நானும் கலாச்சார அமைச்சரைச் சந்தித்தபோது, “வவனியா பொலிஸ்அதிபர் மூலம் இந்தச்சிலை அகற்றப்படுமென அமைச்சர் எமக்கு உறுதியளித்தார்.

### ஜனதிபதி உறுதி

‘அதேதினம் நானும் எதிர்க்கட்சித் தலைவரும் ஜனதிபதியைச் சந்தித்து இதுபற்றி பேச்சு நடத்தினோம்; குறிப்பிட்ட சிலையை அகற்றுவதற்கு கலாசார அமைச்சருக்குப் பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவாரென்றும் ஜனதிபதி எமக்கு உறுதி அளித்தார். எனினும் இச்சிலை இன்னமும் அகற்றப்படவில்லை.” (இ)

## நவம்பர் 12-ல் பட்ஜட் உரை

(கொழும்பு)

1982ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையை நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் நவம்பர் மாதம் 12ம் திகதி நிகழ்த்துவார்.

அடுத்த ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டுப் பத்திரம் நவம்பர் 3ம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்படும். நவம்பர் 16ல் விவாதம் ஆரம்பமாகி 24ம் திகதி இரவு 8 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும். குழுநிலை விவாதம் நவம்பர் 30ம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 22 வரை நடைபெறும். (மா)

## பெஸ்டல் யாழ். விஜயம்
### சீ-நோர் பற்றி ஆராய்வார்

யாழ்ப்பாணம்

கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா, அமைச்சின் செயலாளர் திரு. அனுரா வீரரத்தின இன்று யாழ். வருகின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வாணிவிழாவில் மின்சாரத்துக்கு மாணவர் பலி

(யாழ்ப்பாணம்)

வாணிவிழாவில் கலந்து கொண்ட மாணவர் ஒருவர் மின்சாரத்துக்குப் பலியானர். அரியாலையைச் சேர்ந்த சோமாஸ்கந்தக்குருக்கள் திருஞானசம்பந்தர் (வயது 17) தான் இவ்வாறு மரணமானவராவர்.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு எஸ் எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடாத்தினர்.

மரணமானவர் ‘ரியூஷன்’ எடுக்கும் ஒரு வீட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாணிவிழவில் கலந்து கொண்டுவிட்டு அங்கு தற்காலிகமாக பொருத்தப்பட்ட மின்சார இணைப்பை அகற்றும் பொழுது மின்சாரத்தால் தாக்குண்டு இடதுகை எரிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## வல்லை வெளி கைதிகள் மூவர் கொலை
# எவரும் அடையாளம் காட்டவில்லை; ஒருவர் விடுதலை; 4 பேருக்கு றிமாண்ட்

(புலோலி நிருபர்)

வல்லை வெளியில் வைத்து விளக்கமறியல் கைதிகள் மூவர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களை சாட்சிகள் அடையாளம் காட்டவில்லை. அடுத்து நான்கு சந்தேகநபர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் ஒருவரை விடுதலை செய்யுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கம்பர்மலையில் அறுவரைப் பலிகொண்ட துப்பாக்கிச் சூட்டுக் கொலைச்சம்பவம் தொடர்பான அப்புத்துரை, துரைராசா, தேவராசா, தங்கராசா, தில்லைநடிராசா, மகேந்திரன் ஆகிய ஆறு எதிரிகளும் யாழ். சிறைச்சாலையிலிருந்து வழக்கு விசாரணைக்காக கடந்த 19ம் திகதி சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பாதுகாப்புடன் பஸ்ஸில் பருத்தித்துறை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது பஸ் வல்லை உப்புச்சந்தியை அடைந்ததும், பயங்கர ஆயுதங்களைக்கொண்ட கோஷ்டியொன்று பஸ்ஸை வழிமறித்து விளக்கமறியல் கைதிகளான அப்புத்துரை, துரைராசா, தேவராசா ஆகிய மூவரையும் துப்பாக்கியால் சுட்டும், வாளால் வெட்டியும் பயங்கரமாகக் கொலை செய்திருந்தது தெரிந்ததே.

இக்கொலைச்சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட குணபாலசிங்கம், ஜெயநாதன், பாலசுப்பிரமணியம், காராளசிங்கம், நாராயணசாமி ஆகிய ஐவரும் பருத்தித்துறை நீதவான் திரு. கே எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். நீதவான் சந்தேகநபர்கள் ஐவரையும் அடையாள அணிவகுப்புக்குட்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

சந்தேகநபர்கள் ஐவரும் கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. ஜி. வி.

(6ம் பக்கம் பார்க்க)

## பௌத்த பிக்கு துப்பாக்கிசூட்டு மரணம்: பாராளுமன்றத்தில் பிரஸ்தாபம்

(கொழும்பு)

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் தற்போது சீர்குலைந்துள்ளது. இன்று காலைகூட கல்கிசை நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்கவந்த பௌத்தபிக்கு ஒருவரும் மற்றொருவரும் நீதிமன்ற வளவினுள் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமாகியுள்ளனர். அரசினுல் மட்டும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டிவிட முடியாது. எதிர்க்கட்சிகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு நீதி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

நீதித்துறை திருத்தச் சட்டமூலம் சபையில் நிறைவேறியது. இச்சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் பேசிய திரு. விஜயரத்ன மேலும் கூறியதாவது:-

இப்புதிய திருத்தச் சட்டத்தின் மூலம் இப்போது 16 பேராக இருக்கும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் 20பேராக அதிகரிக்கப்படும்.

யாழ்ப்பாணம் குடும்ப நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட வழக்குகளில் 8 வழக்குகள்மட்டுமே சமாதானமாகத் தீர்க்கப்பட்டுள்ளது. யாழ். மக்கள் சமாதானத்தை விரும்புவதில்லைப்போலும். காலி குடும்ப நீதிமன்றத்தில் 195 வழக்குகளில் 55 வழக்குகள் சமாதானமாகத் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன. (ம-இ)

## 3 நாள் சைவ மகாநாடு யாழ்நகரில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் அகில இலங்கை சைவமகாநாடு இன்று ஆரம்பமாகிறது.

சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் இம்மகாநாடு நடைபெறுகிறது.

இன்று காலை 9 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் விசேட ஆராதனையுடன் மகாநாடு ஆரம்பமாகிறது. முதல்நாள் நிகழ்ச்சிக்கு பண்டிதர் மு. கந்தையா தலைமை தாங்குகிறர். பிரம்ம ஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் திரு. நம. சிவப்பிரகாசம், திரு க சிவராமலிங்கம், திரு. ச. விநாயகமூர்த்தி ஆகியோர் உரைநிகழ்த்துவர். (இ)

# செய்திக் குவியல்

## பாராட்டும் கோரிக்கையும்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் போதிய வேதனமும் இன்றி ஒழுங்கான பதவி உயர்வுகள் அற்ற நிலையில் விரக்தியுற்று வெளிநாடு செல்லும் வேளையில் கல்வி வெள்ளை அறிக்கை விதந்துரைப்புகள் மூலம் ஆசிரிய பதவிக்கு தகுதியானவர்களைத் திரட்டவும் அவர்களைச் சேவையில் தொடர்ந்திருக்கச் செய்யவும் ஆசிரியர்களுக்கு உயர்ந்த சம்பளம் வேண்டும் என்பதை உணர்ந்து ஆசிரியர்களின் சம்பளம் மீளாய்வுக்கென ஒரு சபையினை அமைக்கமுன்வந்துள்ள இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் பாராட்டியுள்ளது.

சம சம்பளப் போராட்டத்தில் நீண்டகாலமாக ஈடுபட்டு எந்தவித நன்மையையும் அனுபவிக்காமல் வேதனையுடன் இருப்பதால் இருக்கும் நீண்டகால சேவையுடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடைய சம்பள முரண்பாட்டையும் நீக்கி அவர்களுடைய சம்பளத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று மேற்படி சங்கத்தின் பதில் பொதுச்செயலாளர் திரு. த பஞ்சலிங்கம், நிர்வாகச்செயலாளர் திரு. நா. சோதிநாதன் ஆகியோர் கல்வி அமைச்சரைக் கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

(மா-இ)

## கார் விபத்தில் அழிக்குமரன்

(கொழும்பு)

கொழும்பு ஹவ்லொக் பிளேசில் நடந்த கார் விபத்தில் அழிக்குமரன் ஆனந்தன் படுகாயமடைந்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டிற்கருகே இவ் விபத்து நடந்துள்ளது. தமது மோட்டார் சைக்கிளை வீதியில் தள்ளிக்கொண்டுவந்த போது பின்னால் வந்த கார் அவரை மோதியது.

நெஞ்சில் பலத்த காயங்களுக்குள்ளான ஆனந்தன் அவசர சத்திர சிகிச்சைக் குட்படுத்தப்பட்டார்.

## காலி வீதி பஸ் விபத்தில் பெண் பலி

பம்பலப்பிட்டி சந்தியில் நடைபெற்ற இ. போ. ச. பஸ் விபத்தில் புஷ்பா சந்திரசேகரம் என்ற பெண் பலியானார்.

இப்பெண்ணின் கணவரான எஸ் சந்திரசேகரமும் மகனும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த சந்திரசேகரம். பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. எஸ். வாமதேவனின் மூத்த சகோதரராவார். பம்பலப்பிட்டி கோவிலுக்கு சென்றுவிட்டு இவர்கள் திரும்புகையிலேயே இவ் விபத்து ஏற்பட்டது.

## இடமாற்றத்தை நிறுத்தக் கோரிக்கை

[குறிகாட்டுவான்]

புங்குடுதீவு சமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி அஞ்சலா இராசதுரை இம்மாதம் முதல் இடமாற்றம் பெற்றுச்செல்லுகின்றார்.

இவரது இடமாற்றத்தை இக்காலபோகம் முடியும்வரை நிறுத்துமாறு உதவி ஆணையாளருக்கு புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு விவசாயிகள் ஒருமித்து மகஜர் ஒன்றைக்கையளித்துள்ளனர்.

## உணவுப்பண்டம் திருட்டு

[மண்டைதீவு]

மண்டைதீவு சந்தியில் உள்ள தேனீர்க்கடையில் உணவு பண்டங்களும் சிறுதொகை பணமும் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கடை உரிமையாளர் திருமதி பாக்கியம் சுப்பையா யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத்தொடர்ந்து பொலிசார் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். [கு]

## ஊழியர் விபரம் சேகரிப்பு

(புலோலி)

யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உப - அலுவலகங்களில் கடமையாற்றும் பதில் தற்காலிக அமைய. அடிப்படை ஊழியர்கள் பற்றிய விபரங்களை திரட்டுவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அபிவிருத்திசபை மேற்கொண்டுள்ளது.

அபிவிருத்திசபை உபஅலுவலகங்களில் குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அவ் உப அலுவலகங்களில் கடமையாற்றும் பதில் தற்காலிக அமைய அடிப்படை ஊழியர்கள் பற்றிய விபரங்களை உடனடியாக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக்கு அனுப்பிவைக்க வேண்டுமென யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை கோரியுள்ளது. [கு]

## மீன் விலை அதிகரிப்பு

[சண்டிக்குளி]

யாழ் மாவட்டத்தில் மீன் விலை என்றும் இல்லாத அளவு உயர்ந்துள்ளது. உள்ளூர் மீன் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட கருவாட்டு வகைகளுக்கும் மிகுந்த கிராக்கி ஏற்பட்டுள்ளது.

மீன் பிடியாளர்களின் மீன்பிடி உபகரணங்களாகிய வலை நூல், மிதப்புக்கட்டை, தங்கூசி, தூண்டில் போன்ற பொருட்களின் திடீர் விலையேற்றத்தினாலேயே மீன் தட்டுப்பாடும் விலையேற்றமும் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மீன் பிடி உத்தியோகத்தர் பரிசோதகர் திரு ந. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். [கு]

## மன்னாரில் கிராமோதைய சபைகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள 35 கிராமசேவகர்கள் பிரிவிலும் தலா ஒரு கிராமோதைய சபைகள்வீதம் 35 கிராமோதய சபைகள் அமைக்கப்படவுள்ளன.

[illegible] நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை செயலாளரும், மன்னார் அரசாங்க அதிபருமான திரு. [illegible] மேற்கொண்டு வருகின்றார். [கு]

துன்னாலை வாலிபர் கொலை வழக்கு:

## 'தொண்டையிலும் இரத்தம் காணப்பட்டது'

(புலோலி)

"சம்பவம் நடந்த இடத்திற்கு நான் சென்று பார்த்த போது இரத்தம் சிந்திக் கொண்டிருந்தது நீருபெடிந்து கொண்டிருந்தது. தொண்டையிலும் இரத்தம் காணப்பட்டது சாரத்திலும் இரத்தம் காணப்பட்டது. சாரத்தை உயர்த்திப் பார்த்த போது காயம் போல இரத்தம்காணப்பட்டது. சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனையின்போது அவற்றைப் பார்ப்பார் என்பதால் நான் அந்த இடத்தைத் துடைப்பித்துப் பார்க்கவில்லை"

இவ்வாறு துன்னாலை வாலிபர் இராசகோபால் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் மரண விசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி திரு திருஞானசம்பந்தர் வேலுப்பிள்ளை கூறினார்.

துன்னாலை வடக்கைச்சேர்ந்த இராசா இராசகோபால் (வயது 26) என்ற வாலிபரைக் கொலை செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டி சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம், மாணிக்கம் சின்னத்தம்பி, வடிவேலு சரவணபவா ஆகியோருக்கு எதிராகப் பருத்தித்துறைப் பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் கே. எஸ். கணேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

மரணவிசாரணை அதிகாரி தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:

"நான் போன பொழுது பிரேதம் தொங்கிக் கொண்டிருந்தது. மாவட்ட வைத்திய அதிகாரி வந்த பின் என்னுடைய கண்காணிப்பின் பேரில் சடலம் கீழே இறக்கப்பட்டது. பிரேத பரிசோதனை சடலம் தொங்கிக் கொண்டிருந்த அதே இடத்தில் நடைபெற்றது. அந்த நேரத்தில் நான் அதற்குப்பக்க உள் வகுப்பறையில் வைத்து சாட்சியங்களைப் பதிவு செய்தேன். சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சிற்றம்பலம் இதைத் தெரியப்படுத்தினார்.

"சடலத்தில் சாரம் வழமையாக சாரம் கட்டுவது போலக் கட்டப்பட்டிருந்தது. நான் சடலத்தின் அடிவயிற்றைத் திறந்து பார்க்கவில்லை. இறந்தவர் இளைக்கயிற்றில்தான் தொங்கிக் கொண்டிருந்தார்". (அ)

## வெற்றிதோல்வி இல்லை

(ஊர்காவற்றுறை/[illegible]தீவு)

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய கோஷ்டிக்கும் நெடுந்தீவு மகாவித்தியாலயக் கோஷ்டிக்குமிடையே வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு பகுதியினரும் 1-1 என்ற அடிப்படையில் கோல்களை எடுத்தனர். இதனால் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. (அ)

## யாழ்-மட்டு உதைபந்தாட்டம் 30-ம் திகதி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்துக்கும். யாழ். -மாவட்டத்துக்குமிடையே விளையாட்டு மைச்சினால் இம்மாதம் 10ம் திகதி நடாத்தப்படவிருந்த உதைபந்தாட்டப் விளையாட்டுப் போட்டி இம்மாதம் 30ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்குமிடையே நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டி இம்மாதம் 17ம் திகதி நடைபெறவிருக்கிறது (மா)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ- பிரிவுகள் 524, 532)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற செல்லப்பா குணரத்தினம் என்பவரின் மரண சாதனத்தை /மரணச்சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

செல்லப்பா குணரத்தினம் கைம்பெண் இந்திரா, சுழிபுரம்.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் -இல. T 105

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1981-ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 - ஆம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

சு. வ. கணேசன்

பதிவாளர்

1981-ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 23-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

1172

06 10-81

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலியில் ஆறு பரப்புக் காணி விற்பனைக்குண்டு பகுதி பகுதியாகவும் வாங்கலாம், தொடர்புகொள்ளவும். த தர்மஜெயசூரியர், அரச வீதி, உரும்பராய் 1158

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 2 பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். நா. குணபாலன், இல 9, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1179

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சண்டிருப்பாய் பொன்னையா சண்முகநாதன்என்பவரது மரணசாதனமில்லா மரணச் சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

பொன்னையா சண்முகநாதன் கைம்பெண் ஞானம்மா, சண்முகவாசா, சண்டிருப்பாய்

மனுதாரர்.

வழ. இல.

தத்துவநியாயாதிக்கம் -72

1. நாகமணி குணரத்தினம் பெண்
2. மகேஸ்வரி, சண்டிருப்பாய்
3. வயித்திலிங்கம் நாகேந்திரம், பெண்
4. சரஸ்வதி, தேவாலய வீதி; சங்கானை.

எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமில்லா மரணச் சொத்து வழக்கு மேற்சொட்டிய இறந்தவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981-ம் ஆண்டு புரட்டாதி மீ 8-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

சு. வ. கணேசன்

பதிவாளர்.

117 3

## கேள்வி விளம்பரம்

### யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

கிளிநொச்சிச் சந்தையில் 1-ம் இலக்க மாட்டிறைச்சிக் கடையில் 26-10-81 தொடக்கம் 31-12-81 வரை கட்டும் பாட்டு விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்குவதற்கான கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்கள் ரூபா 300/- பிணைப்பணமாகவும், ரூபா 25/- கேள்விப்பிணைப்பணமாகவும் செலுத்துவதன் பேரில் 19-10-81 பி. ப 5-00 மணிவரை கிளிநொச்சி உப அலுவலகத்தில் வழங்கப்படும். கேள்விப்பத்திரப் பணம் ரூபா 25/- மீள வழங்கப்படமாட்டாது

கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்டு "செயலாளர், யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு 20-10-81 பி ப 2-00 மணிக்குப் பிந்தாது கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும் உறையின் இடதுபக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படுதல்வேண்டும் குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் எக்காரணங்கொண்டும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் கிளிநொச்சி உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்) தேவநேசன் நேசையா

செயலாளர். யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை,

யாழ்ப்பாணம்.

1177

மணிவாக்கு

எத்தனை இன்ப ஊற்றுய் இறையுள நாக்களுள்ள அத்தனை அவரறை அந்தோ, அறிவிலார் அடினம் என்பர்.
—ஜோன் மில்டன்

# நமது நோக்கு

## காரைநகர் சீ-நோர் திட்டம்

பிரபலம்பெற்ற சீ நோர் ஸ்தாபனம் தனது முதற் திட்டத்துக்கு காரைநகரைத் தெரிந்தெடுத்தது இன்னும் சிலருக்கு நூதனமாகவிருக்கும்.

அமெரிக்கன்மிஷன் வட்டுக்கோட்டையை தென் ஆசியாவிலே பிரபல்யமான ஆங்கிலக்கல்லூரியை ஸ்தாபிக்க தெரிந்தெடுத்ததும் நூதனமா?

ஸ்தாபனத்தின் நோக்கத்துக்கு உகந்த சுற்றாடம், சூழ்நிலை எங்குண்டோ அங்கு நிறுவனங்கள் உதயமாவதும் நோக்கங்களை நிறைவேற்றுவதில் நாடு முன்னேறுவதும் வரலாறுசுருக்கும் உண்மைகளே!

அதேசமயம், பின்னோரைப் பிடிக்க பெருச்சாளியாக மாறும் முரண்பட்ட திட்டங்களையும் நாம் காணமலில்லை; அது மட்டுமல்ல நூற்றாண்டு காலமாக வளர்ந்து வானளாவிய மாபெரும் கல்விக்கூடங்கள் மருத்துவ ஸ்தாபனங்கள் தங்கள் பழம்பெரும் நிலையினின் இறங்கி நிரப்பந் தங்களை காலத்தின் கோலம் காட்டுவதுண்டு.

வட்டுக்கோட்டையிலிருக்கும் பழம்பெரும் கல்லூரி அரசியல்தலையீட்டால் நிலைகுலைந்திருந்ததுவும் நாமறிந்ததே! ஆட்சியின்கொள்கை மாற்றங்கள் எல்லாம் நன்மையல்ல.

கடந்த சில தினங்களாக காரைநகர் சீ-நோர் அபிவிருத்தித் திட்டம்பற்றி எங்கள் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகளைப்படித்த வாசகர்கள் நிச்சயம் கவலை கொள்ள நியாயமுண்டு

கட்டுரைகள் ஒரு தலைப்பட்ட கருத்துக்களை வெளியிட்டதென்று கொண்டாலும், விவகாரங்கள் செவ்வனே விசாரிக்கப்படவில்லையென்று கருதினாலும், ஆட்சேபிக்கமுடியாத ஒரு உண்மை எமதுகவனத்தைக் கவர்ந்தது!

அபிவிருத்தியே முக்கியமாகக் கருதினால், அதற்கு மூலகாரணமானவர்கள், திட்டத்தை அமுலாக்கும் ஊழியர்களே! மேல்மட்ட நிர்வாகிகள், நிபுணர்கள், உயர் உத்தியோகத்தர்கள் அத்தியாவசியமான அங்கமாயிருந்தபோதும், திட்டப்படும் திட்டங்களை உருவாக்குபவர்கள் திறமைவாய்ந்த தொழிலாளிகளே!

இந்த அடிப்படையில் இந்தப் பாரிய திட்டத்தில் பலாண்டுகளாக தொழில் புரிந்து பல ஆசைவார்த்தைகளுக்குப் பலியான, இன்று தொழில் இழந்த இடைநீக்கம் செய்யப்பட்ட அல்லது தொழிலில் உறுதியற்ற நிலைகாணும் பலருடைய வேதனை நிறைந்த முறைப்பாடுகள் திட்டம் தேய்ந்துபோகின்றதென்பதைத் தெளிவாகக்காட்டுகின்றது.

1967ம் ஆண்டு 42 தொழிலாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இது. லாபத்தைக் குறிக்கோளாகக் கருதாது சேவையே நோக்கமாகக் கொண்டது; கிராமப்பகுதிகளிலுள்ள வறிய வாலிபர்களுக்குவேலை வாய்ப்புக்களை அளித்து, வளர்ச்சி குன்றிய கிராமங்கள் முன்னேற மீன்பிடித் தொழிலை மையமாகக் கொண்டு திட்டத்தைப் பெருப்பித்தல்—இந்தச் சிறந்த நோக்கங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விருத்தியடைந்து வந்த 'வீரக் கதையை' நாம் இன்றும் மறந்துவிடவில்லை.

தொடக்கத்திலிருந்து பத்து வருடங்களுக்கும் மேல் நோர்வே நாட்டின் நிதி உதவி நேரடியாகக் கிடைத்துவந்தது. திட்டம் பெருப்பமடைந்ததும் ஊழியர்கள் பெருமளவில்—1400 பேர்—வேலைவாய்ப்புப் பெற்ற "வசந்த" காலமென்று கூறலாம்.

மீன்பிடித்தொழில் 'நல்ல வளர்ச்சி கண்டகாலமென பதை இருல். மீன், நண்டு போன்ற தரமான வர்க்கங்கள் பதனிடப்பட்டு பக்குவமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சாதனை பறைசாற்றியது.

பதினைந்து வருடங்களுக்குப் பின் இந்த ஸ்தாபனம் மாட்டுவாலபோல் வளரும் செய்தியை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இது அமைந்த காரணத்தால் தக்கமுறையில் விசாரணை செய்து புனரமைக்கவேண்டிய நடவடிக்கைகள் தயக்கமின்றி எடுக்கப்படவேண்டும்

வடக்கு-தெற்கு பாகுபாடு அரசியல்தலையீடு, நிர்வாகச் சீர்கேடு, இவையெல்லாம் பல ஆக்கவேலைகளையும் அபிவிருத்தி முயற்சிகளையும் பழுதாக்கிவிட்டது நாமறிந்தவிடயம்.

மீன்பிடித்துறையிலும், மீனவர் நல்வாழ்விலும், அக்கறை கொண்ட கௌரவ அமைச்சர், இந்தப்பெருமை வாய்ந்த திட்டம் பழுதடையாமல், முன்னிருந்த நிலைக்கு உயர்த்துவதோடு, பரந்துபட்ட அபிவிருத்தி வேலைகள் மூலம், ஊழியர்களுக்கு நீதிவழங்கவும், இதனை நம்பிவாழும் ஆயிரக்கணக்கான ஏழைக்குடும்பங்களுக்கு புத்துயிர் அளிக்கவும் ஆவனசெய்வாராக.

### வல்லிபுரகோவிலில் வங்கிக் கிளை

(புலோலி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில், இலங்கை வங்கி தற்காலிகக் கிளையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

11ம் திகதி சம்பறத் திருவிழாவும், 12ம் திகதி இரதோற்சவமும், 13ம் திகதி கடல் தீர்த்த உற்சவமும், 14ம் திகதி கேணித் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

ஆலய தர்மகர்த்தாசபையின் கோரிக்கைமீது இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை, வல்லிபுர ஆழ்வார் கோவிலில் தற்காலிக அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது. வல்லிபுரக்கோவில் மேற்கு வீதியில் அமைந்துள்ள இக்கிளையில் அல்லது பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் ஆலய ராஜகோபுர நிதிக் கணக்கில் மக்கள் பணத்தை வைப்பிலிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[10]

காரைநகர் சீ-நோர் திட்டம் வெற்றிபெற்று இதன் இலட்சியம் நிறைவுபெற என்ன செய்ய வேண்டுமென்று சில யோசனைகளை ஏற்கனவே தெரிவித்திருந்தோம். இப்பொழுது வேறு சில ஆலோசனைகளையும் கூறுகின்றோம்.


சீ-நோர் காரைநகரில் உதயமாவதற்குக்காரணமாகவிருந்த நோர்வே நல்லொழுக்க வாலிபர் இயக்கத்தினர் தேர்ந்தெடுத்த கிராமங்கள் முன்னேறவேண்டாமா?

'பாலைவன'மாக அன்று காட்சிதந்த இக் கிராமங்கள் எந்தவித முன்னேற்றமுமின்றி இன்றும் அதேநிலையில்தான் கொட்டிலும் குடிசையுமாகக் காணப்படுகிறது இக்கிராமங்கள் சோலையாகவேண்டாமா?

பின்தங்கிய மக்களின் பொருளாதார விடுதலைக்காகப் பாடுபடுவதாக்கூறி; இதன் அடிப்படையில் இம்மக்களுக்குத் தொழிற்பயிற்சியளித்து, உதவியோகவசதிகள் செய்துகொடுப்பதாகச் சொல்லி, பரம்பரையாகச் செய்துவந்த தொழிலிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தி, வேறு தொழில்களைச் செய்ய ஊக்குவிப்பதாக 'தம்பட்டம்' அடிக்கப்பட்டதாகவும் இம்மக்களுக்கு இதுவரை எதுவுமே செய்யப்படவில்லை; முழுக்க முழுக்க ஏமாற்றும் தந்திரமேஇதுஎன்றும்குற்றம்சுமத்தப்படுகிறது நாம் ஆராய்ந்தவரை இக்குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாகவே அறிகின்றோம். ஏன் இந்தப் பழி?

ஆரம்பத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியர்களும் தொழிலாளர்களும்திடீர்திடீர் என்று வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால் என்ன அடிப்படையில் வேலைநீக்கம் நடைபெறுகிறது என்பதற்கு நிர்வாகம் இன்றுவரை வியாக்கியானம் கொடுக்கவில்லை. 'அப்பீலும்' கிடையாது. ஏன் இந்தப்போக்கு?

## 'ஈழநாடு' கள ஆய்வுக் குழுவின் நேரடி கண்டுபிடிப்புகள் - (1)




னர். நாம ஏன் ஆட்சேபிக்கின்றோம் என்றால், இப்பகுதி மக்கள்-தொழிலாளர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவர்களா என்ற சந்தேகமா? ஏன் இந்த வஞ்சனை?

காரைநகர் சீ-நோர்திட்டத்தின் ஆரம்பகாலத்தில், தங்கள் பிள்ளைகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்து அல்லும் பகலும்பாடுபட்டு கண்ணும் கருத்துமாக இத்திட்டத்தைபேணி வளர்த்தவர்கள், பெருமூச்சுவிடுகின்றனர். அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கண்களிலிருந்து

தைக் கண்காணிக்க, ஊழியர் தொழிலாளர்களைக் கொண்ட ஆலோசனைச் சபைமட்டுமல்ல, நிர்வாகத்திலும் இவர்கள் பங்குகொள்ளும் வகையில் புதிய மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும்.

காரைநகர் சீ-நோர் திட்டம், மெல்ல மெல்ல நகர்வதாகவும், இந்தநிலை நீடித்தால் ஒரு பாரிய அபிவிருத்தித்திட்டத்தை வடபகுதி இழக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்றும் இந்த நிறுவன ஊழியர்களும், தொழிலாளர்களும், இப்பகுதி மக்களும் அக்கறையுள்ள பலரும் அச்சப்படுகின்றனர். இந்த உண்

## காரைநகர் திட்டம் நல்லபடி இயங்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?

''இப்பகுதி மக்களுக்குத் தொழில்வாய்ப்பு''என்றஅடிப்படை இலட்சியம் புறக்கணிக்கப்பட்டு, இறக்குமதி செய்யப்பட்ட புதுமுகங்கள் காவல் துறையில் நியமிக்கப்பட்ட

நாம் கண்டது வெறும் நீர் அல்ல; செந்நீர்! அது சுடக்கூடியது! சுகம் அனுபவிப்பவர்கள் தப்பமுடியாது.

நாம் கூறுவது; சீ-நோர் காரைநகர்த் திட்டமும் தொழிலாளர்களும் காப்பாற்றப்பட்டு, இப்பகுதி கிராமங்கள் நகரங்களாக, வளமாக வேண்டும் என்பதுதான்.

வெறும் வார்த்தைஜாலங்களால் நாட்களைக் கடத்தலாம் என்று எண்ணி, தங்களையே தாங்கள் ஏமாற்றிக் கொள்ளாமல் நல்ல திட்டங்களை உருவாக்கி இப்பகுதி மக்களின் உயர்ச்சிக்கு ஆரோக்கியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏப்பமிடுவோரும், பெருச்சாளிகளும் இனம் கண்டு பிடிக்கப்பட்டு களையப்பட வேண்டாமா? சீ-நோரின் புனிதம் எந்த நிலையிலும் பாதுகாக்கப்படவேண்டும். இதற்கு; அக்கறைகொண்ட அனைத்துத் தொழிலாளர்களினதும் ஊழியர்களினதும் மக்களினதும் ஒருமித்த ஐக்கியம் அவசியம் இல்லையா?

காரைநகர் திட்டத்திலிருந்து இடமாற்றம் பெற்ற தொழில் நுட்பவாதிகள், நிபுணர்கள், மூளைசாலிகள் மீண்டும் காரைநகர் திட்டத்திற்கு இடமாற்றம்செய்யப்படவேண்டும். ஓரிடத்தில் அதிகாரங்கள் குவிந்துகிடக்கும் நிலையை மாற்றி, நிர்வாகத்தைப் பரவலாக்கி காரைநகர் சொத்துக்கள் அனைத்துமே இங்கு மீளப்பெற்று, இங்கேயே இயங்கக்கூடியவகையில் நிர்வாகம் செயல்படவேண்டும். அந்தநிர்வாகத்துக்கு அரசு கட்டுப்பாடு அவசியமென்று கூறப்பட்டால் தலையீடுகள் தவிர்க்கப்பட்டாகவேண்டும். கணக்கு-வழக்குகள் இங்குதான் இருக்க வேண்டும். காரைநகர்த் திட்டம் நஷ்டமின்றி இயங்குவ

மையை மறைக்கக்கூடாது. காரைநகர் சீ-நோர் நிறுவனத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என்றால் இதன் மர்மம் கண்டு பிடிக்கப்பட்டு, சீர்கேடுகளும் ஊழல்களும் களையப்பட வேண்டும்.

இப்பகுதி பாராளுமன்ற அங்கத்தவர் சற்று ஆழமான நடவடிக்கைகளை துணிந்து எடுத்தாலென்ன?

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை காரைநகரைப் பாதுகாக்க உஷாராகுமா?

இத்திட்டத்தின் ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யபபட்டது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஒரு சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியிருந்தார்.

தமிழர் விடுதலை கூட்டணி மட்டுமல்ல; வடபகுதியின் சகல அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இவ்விஷயத்தில் விழிப்பாகவிருந்து காலதாமதமற்ற நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டும் என்பது எமது கணிப்பு.

1967ம் ஆண்டு தொடக்கம் 1979-ம் ஆண்டுவரை நோர்வே நாட்டின் நிதிஉதவி நேரடியாக காரைநகர் நிறுவனத்துக்குக் கிடைத்தது. காரைநகர் நிறுவனம், காரைநகரிலேயே முழுமையாக மீண்டும் இயங்கும் வகையில் அதிகாரங்கள் வழங்கப்பட்டால், அதிகாரசபையும் இங்கு செயல்பட்டால், நோர்வே நாட்டின் உதவி மீண்டும் கிடைக்கும் என்பது பலரின் நம்பிக்கை. நட்டங்களைச் சரிக்கட்டி நல்லபடி செயல்பட, நோர்வேயின் நிதி உதவி இப்பொழுது அவசியம் மட்டுமல்ல; அந்த நாட்டின் தொடர்பும் தேவை. நாம் கூறும் மாற்றங்கள் இங்கு ஏற்படும் பட்சத்தில் சீ-நோர் காரைநகர்த் திட்டத்

6ம் பக்கம் பார்க்க!!

### மக்கள் கருத்து

### சாவகச்சேரி பஸ் நிலையம்

சாவகச்சேரி பஸ் நிலையம் நவீன முறையில் திருத்தியமைக்கப்பட இருப்பதால். அதன் நில வேலைக்கான கற்கள் கொடுப்பனவு செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட தொகைக் கற்களில் அரைப்பங்கு கற்களே பறிக்கப்பட்டதாகவும், மிகுதி பறிக்கப்படமாட்டாது எனவும் தெரியவருகிறது இது இவ்வாறிருக்க பஸ் நிலையத்தில், கற்கள் கியூப்புக்கள் ஆக்கப்பட்டிருப்பதால், பஸ்கள் தரித்து நிற்கமுடியாத நிலையிலுள்ளன. இதனால் பிரயாணிகள் பஸ் எடுப்பதற்கு குறிப்பிட்ட தரிப்பு இல்லாதபடியால் அங்கும் இங்குமாக ஓடித்திரியவேண்டியுள்ளது. இதுசம்பந்தமாக அதிகாரிகள் கற்களின் அளவு, நில வேலை போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி விரைவில் பூர்த்தி செய்து, மக்களின் அவல நிலையை நீக்குவார்களாக.

ப. கவீந்திரன்

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

# ‘சதாத்தின் படுகொலையில் வெளிநாடுகளுக்குச் சம்பந்தமில்லை’

### பாதுகாப்பு அமைச்சர் கஸாலி கூறுகிறார்

கெய்ரோ, அக். 8

“எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தின் படுகொலையில் வெளிநாடுகள் எதுவும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இப்படுகொலை முஸ்லிம் மத வெறிக் குழு ஒன்றின் செயலாகும். முஸ்லிம் மத வெறியர் ஒருவர் தலைமையிலான நான்கு சிப்பாய்கள் அடங்கிய குழு ஒன்றே இப்படுகொலையைச் செய்தது. எந்த ஒரு அரசியல் கட்சியும் சதாத்தின் படுகொலையில் தொடர்பு கொண்டிருக்கவில்லை.”

மேற்கண்டவாறு எகிப்தின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் கஸாலி கெய்ரோவில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

சதாத்தின் படுகொலையை எகிப்தின் மூன்று முக்கிய எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன.

அதேவேளை எகிப்தின் புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான பொதுமக்கள் கருத்துக் கணிப்பு வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் அறிவித்தபோல் இக்கருத்துக் கணிப்பு வரும் திங்கட்கிழமை நடைபெற மாட்டாதென்றும் தெரிவிக்கப்பட்டது.

எகிப்தின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவாரென எதிர்பார்க்கப்படும் ஜனுப் முபாரக் (53 வயது) சதாத்தின் கொள்கைகளைத் தொடர்ந்து நிறைவேற்றப் போவதாகத் தெரிவித்துள்ளார். (லே)

### மணியம்தோட்ட குடியேற்றத்திட்டத்தில்

## குடியிருப்பாளருக்கு காணி மறுக்கப்படுகிறதாம்

### எதிர்க்கட்சித் தலைவருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மணியம் தோட்ட குடியேற்றத் திட்டத்தின் பின்புறத்தில் உள்ள காணிகளில் நீண்ட நாட்களாகக் குடியிருந்து வரும் எமக்கு அக்காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு மேற்படி காணியில் குடியிருக்கும் சுமார் 90 குடும்பங்கள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். எம். பி. திரு வி. யோகேஸ்வரன், யாழ். மாவட்ட சபை உறுப்பினர் திரு ஜே. எஸ். அழகைரா ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் இக்காணிகள் தொடர்பாக எம்மை அழைத்த காணி அதிகாரி, மேற்படி காணிகள் எமக்குத் தரப்பட மாட்டாது என்று எம்மிடம் தெரிவித்துள்ளனர். எனவே காணியற்ற ஏழை மக்களாகிய எம்மை வெளியேறுவாறு நடவடிக்கை மேற்கொள்ளவும் என்றும் அவர்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர். (இ)

### யாழ். மாவட்டசபை

## பொதுசன நூலகங்களுக்கு நூல்கள் வழங்க ஏற்பாடு

(புலோலி)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உப அலுவலகங்களின் கீழ் இயங்கிவரும் பொதுசன நூல் நிலையங்களுக்குப் புதிய நூல்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

இதற்கிணங்க அபிவிருத்திச் சபை, உப அலுவலக குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்களை அவ் அலுவலகத்தின் கீழ் இயங்கும் நூல் நிலையங்களுக்கு நூல்கள் கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கீட்டு விபரங்களுடன் தேவையான புத்தகப் பட்டியலொன்றையும் அனுப்பி வைக்குமாறு பணித்துள்ளது.

உப அலுவலக நூல் நிலையப் பொறுப்பாளர்கள் நூலகங்களுக்குத் தேவையான புத்தகப் பட்டியல்களைக் குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் ஒப்படைத்துள்ளனர். (க)

## தமிழிலும் சிங்களத்திலும் மகாராணியின் உரை

(கொழும்பு)

சர்வஜனவாக்குரிமைப் பொன்விழா தொடர்பாக காலிமுகத் திடலில் இடம்பெறும் வைபவத்தில் கலந்து கொள்ளும் பிரிட்டிஷ் மகாராணியின் ஆங்கில உரை சிங்களத்திலும் தமிழிலும் உடன் மொழி பெயர்க்கப்படும். ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் உரையாற்றுவார்.

காலிமுகத் திடலில் நடைபெறும் 10 நிமிடங்கள் நடைபெறும் அணிவகுப்பில் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்குபற்றுவர்.

800 [illegible] மாணவியர் பாண்ட் வாத்தியக் கோஷ்டியில் பங்குபற்றுவர்.

மகாராணி தம்பதிகளுக்கும் ஜனாதிபதி தம்பதிகளுக்கும் 2 மாணவர்களும் 2 மாணவிகளும் மாலை அணிவிப்பர்.

இவ்வைபவத்தில் கலந்து கொள்ளும் பொது மக்கள் பார்வையிடுவதற்கு வசதியாக மகாராணியார் காலிமுகத் திடலில் உள்ள மத்திய வீதி கடற்கரை வீதி, ஜனாதிபதி வீதி வழியாக வந்து மீண்டும் மத்திய வீதி வழியாக கொள்ளுப்பிட்டிக்குச் செல்வார். (ம-இ)

## இலங்கைக்கு கடத்த இருந்த பீடி இலைகள் மீட்பு?

சென்னை, அக். 8

இலங்கைக்குக் கடத்திச் செல்லப்பட இருந்ததாகக் கருதப்படும் 30 மூடை பீடி இலைகள் பட்டுக்கோட்டையில் கைவிடப்பட்ட நிலையில் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

இவற்றின் பெறுமதி சுமார் 60,000 ரூபாவெனவும் தெரிவிக்கப்பட்டது. (லெ)

### 80 ஜூலை வேலைநிறுத்தத்தால்

## வேலை இழந்தோர் நிலை: அரசு மறுபரிசீலனை

(கொழும்பு)

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் கடந்த 80ம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற வேலைநிறுத்தத்தை அடுத்து வேலை இழந்தோரின் எதிர்காலம் குறித்து நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இவ்விடயத்தில் மிகவும் அக்கறை கொண்டுள்ள ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இது தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பொது நிர்வாக அமைச்சரிடம் ஜனாதிபதி ஆலோசனைகளைக் கோரியுள்ளார்.

இத்தகவலை ராஜாங்க அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்றுப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

80ம் ஆண்டு வேலைநிறுத்தத்தினால் வேலையிழந்தோர் விரும்பினால் ஓய்வுபெறலாமென்றும் திரு. அல்விஸ் கூறினார். (ம-இ)

## பாடசாலைத் தவணை நாட்களில் மாற்றம்

(கொழும்பு)

பாடசாலைத் தவணை விடுமுறை தினங்களை மாற்றி அமைப்பது குறித்துக் கல்வி அமைச்சு ஆலோசித்து வருகிறது.

இது குறித்து நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

புதிய மாற்றத்துக்கமைய முதலாம் தவணைக்காக பாடசாலைகள் தைப் பொங்கலுக்குப் பின்னரே ஆரம்பிக்கப்படும் எனத் தெரிகிறது.

ஜி. சி. ஈ. உயர்தர, சாதாரணதர பரீட்சைக் காலத்தைக் கருத்திற் கொண்டே புதிய மாற்றங்கள் செய்யப்படுமாம். (இ)

## வாணிவிழா

[மானிப்பாய்]

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி இந்து மாமன்றம் நேற்று கலைவாணி விழாவை கல்லூரி மண்டபத்தில் திரு. வே. சுந்தரதாஸ் தலைமையில் கொண்டாடப்பட்டது.

## ஒரு முழுமையான வாழ்வு

புலோலி வேலாயுதம் மகா வித்தியாலய அதிபராயிருந்து இளைப்பாறி அமரரான திரு மு. ஆ. தம்பராஜாவின் மறைவு கல்வி உலகுக்குப் பெரும் பேரிழப்பாகும்.

லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானமாணிப் பட்டதாரியான இவர் புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் தன் கல்விப் பணியைப் பிற இடங்களிலேயே அதிகமாகச் செய்தவராவர். அறிஞர் ஹன்டி பேரின்பநாயகம் காலத்தில் அவரது அபிமானத் துணை ஆசிரியராகக் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், இடைக்காடு இந்து மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி, வல்வை சிதம்பராக் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தா ஆகிய கல்லூரிகளில் கணிதமும் விஞ்ஞானமும் கற்பித்து வந்தார்.

இவர் பின்பு புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்துக்கு துணை ஆசிரியராக வந்தார். இருந்த அதிபர் திரு. க. இராமநாதபிள்ளை ஓய்வு பெற்றதும் இவர் அதிபராகக் கடமை ஏற்றார். புலோலி வேலாயுதம் மகா வித்தியாலய வரலாற்றில் இவரது காலம் ஒரு தனி வரலாறு. அங்கே அமைந்துள்ள விஞ்ஞான ஆய்வுகூடமும், நூலகமும் இன்று பொலிவுற்று விளங்குவது அவரது அயராத முயற்சியால்தான்.

நாடுபோற்ற வாழ்ந்த அவர் சில காலம் ஊராட்சி அரங்கிலும் கலந்தார். பருத்தித்துறைப் பட்டணசபை உறுப்பினராகவும் இருந்து நல்ல சேவை செய்தார். கட்டுமொத்தமாக அவர் வாழ்வு ஒரு முழுமையான வாழ்வு.

—ஆ. தேவராசன்


மீண்டும் வந்துள்ளது

மாணவ நண்பன்



Pilot
BALL POINT

பைலட்
மத்தியதர
போல் பாயின்ட்



சிறப்பான எழுத்திற்கு
உகந்த பைலட்
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

ரூ.1/75

விற்பனையாளர். ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ் கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

SRI COMMUNICATION

சாந்தி 4வதுபரபரப்பூட்டும்ஹவுஸ்புல் வாரம்
(யாழ் நகர்) தினசரி 10 30, 2-30, 6-15 & 9 45
கமல்... ஸ்ரீதேவி... குரு
நம்பியார் வெண்ணிறஆடை நிர்மலா- முத்துராமன்- சுந்தரராஜன்
தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டிய வண்ண ஓவியம்

(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
மேஜர் சுந்தரராஜன் – நாகேஷ்
ஜெயலலிதா – ஏ.வி.எம். ராஜன்
மேஜர் சந்திரகாந்த்
இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

8 வது வாரம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி ... துளசிராம்
சங்கராபரணம (கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-லட்சுமி
அவன்-அவள் அது (ஈஸ்ட்மன்கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

ராணி 9வது வாரம் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பாக்கியராஜ், சுமதி மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

WINDSOR JAFFNA இன்று முதல்
Daily : 10-30 a.m., 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
உள்நாட்டுக் கலகத்தின் பின் சின்னாபின்னமாக்கப்பட்ட அமெரிக்காவின் விவசாயி 'ஜோஸி வேல்ஸ்' குடும்பம் தீவிரவாதிகளால் நிர்மூலமாக்கப் படுகிறது.
சீறியெழும்பும் 'ஜோஸி வேல்ஸ்' பழிவாங்கப் புறப்படுகிறான்.
CLINT EASTWOOD — SONDRA LOCKE
in
The Outlaw Josey Wales
Color—Scope — Direction ; Clint Eastwood

யாழ். மனோகரா வெண்திரையில்
✱ எஸ். எஸ். ஆர் ✱ விஜயகுமாரி
✱ ஏ. வி. எம். ராஜன் ✱ நாகேஷ்
மற்றும் பலர் இறங்கி நடித்த



A. V. M. தயாரிப்பு
நானும் ஒரு பெண்
தினசரி 4 காட்சிகள் 10 30, 2-30, 6 30, 9 30
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

# சதாத்தின் இறுதிச் சடங்கில் கார்ட்டர், போர்ட், நிக்ஸன்

## இஸ்ரேல் சார்பில் பெகின்

கெய்ரோ, அக். 8

எகிப்திய ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத்தின் இறுதிச் சடங்குகளில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான திரு ஜிம்மி கார்ட்டர் திரு. போர்ட், திரு. நிக்ஸன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க் தலைமையில் இவர்கள் மூவரும் கலந்து கொள்வவுள்ளனர்.

இஸ்ரேல் பிரதம மந்திரி திரு. பெகினும் எகிப்திய ஜனாதிபதியின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்வதற்காக கெய்ரோ செல்லவுள்ளார்.

இந்திய அரசின் சார்பில் லோக்சபை சபாநாயகர் திரு. பால்சம் எகிப்திய ஜனாதிபதியின் சவக்கிரியைகளில் கலந்து கொள்ளவுள்ளனர். [லே]

## உஷார் நிலையில் அமெரிக்க கடற்படைகள்

வாஷிங்டன், அக். 8

எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத்தின் படுகொலையை அறிந்து கிழக்கு ஆசியப் பகுதிகளிலும், மத்தியதரைக் கடலிலும் நிலைகொண்டுள்ள தமது கடற்படைகளை உஷார்நிலையில் இருக்குமாறு அமெரிக்கா பணித்துள்ளது.

இதேவேளையில் சதாத்தின் படுகொலை குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. [இ]

## கடல் அட்டை சேகரிப்பு

[மன்னார்]

மன்னார் பகுதியில் கடல் அட்டை சேகரிக்கும் தொழில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

மன்னார்ப் பகுதியில் கடல் அட்டை சேகரிக்கும் தொழிலை மேற்கொள்வதற்கான சுமுக நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து கடலட்டை சேகரிக்கும் தொழில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் தனிச் சுகாதாரப் பிரிவாகும்?

[மன்னார்]

மன்னார் மாவட்டத்திற்கென தனியான சுகாதார அத்தியட்சகர் அலுவலகம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலைக் குழுத் தலைவர் ஜனாப் என் எம் எம் [illegible] விடுத்த வேண்டுகோளை அடுத்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. [அ]

## அங்கவீனச்சிசு பிறந்ததால் விரக்தியில் தந்தை தற்கொலை

(சுண்டிக்குளி)

பல தடவை கர்ப்பச் சிதைவுக்குள்ளான மனைவி கடைசியில் அங்கக் குறைவான குழந்தையொன்றைப் பிரசவித்ததால் மனமுடைந்த கணவன் நச்சுத்திரவம் அருந்தித் தற்கொலைசெய்துகொண்டார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த 26 வயதான எஸ். [illegible] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

யாழ் மரண விசாரணை அதிகாரி திரு எஸ் எம் பிரான்சிஸ் மரணவிசாரணையை நடத்தினார்.

திருமணம் முடித்தவர்கள் இருவரும் மிகவும் அன்பாக இருந்ததாகவும், தமக்குப் பல தடவை கருச்சிதைவு ஏற்பட்டதாகவும், இறுதியாக தமது கணவர் கவலையடைந்திருந்ததாகவும் கடைசியில் குழந்தை ஒன்றைப் பிரசவித்ததாகவும் ஆனால் அக்குழந்தை அங்கவீனமுற்றிருந்ததால் கணவர் மனமுடைந்து நச்சுத்திரவம் அருந்தியதாகவும் மனைவியான மதனுவதி (26 வயது) சாட்சியமளிக்கையில் கூறினார்.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. [சு-அ]

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 23 ம் திகதி

வெள்ளிக்கிழமை

[9 - 10 - 81]

மேடம்: எதிர்பாராத வரவுகளுக்கும் இடமுண்டு. வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். பேச்சு வன்மையின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள்.

இடபம்: புதிய பாதை ஒன்று உங்களை எதிர்நோக்கவுள்ளது. நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சுமூகமாயிருக்கும்.

மிதுனம்: எதிர்பார்த்த முடிவில் ஏமாற்றம் தென்படும். உடன் பிறந்தவர்களாலேயே பல தொல்லைகள் தோன்றக்கூடும். கெடுபிடி ஏற்படலாம்.

கடகம்: கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. பசுமையான நினைவுகள் நெஞ்சில் அலைமோதும். இல்லற வாழ்வில் இணைப்புகள் இறுக்கமடையும்.

சிங்கம்: எதிர்பார்த்த திசைகளில் தடைகள் ஏற்படக்கூடும். தொழில்துறை அவ்வளவு திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை. நச்சரிப்பு அதிகரிக்கும்.

கன்னி: ஒளிமயமான நல்ல ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் உற்சாகத்தில் மற்றவர்களும் துணை நிற்பர்.

துலாம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். ஒளியின் வாழ்க்கை ஒளிமயமாகும். இதயத்திலும் குதூகலம் காணப்படும். வரவேற்க வேண்டிய தினம்.

விருச்சிகம்: பொருளாதார நிலை சீரடையும். இல்வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு. பத்திரிகையாளரின் ஜோதனம் உயர்ந்தப்படும்.

தனுசு: தவிர விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம். விவசாயி பாதிக்கப்படலாம். [illegible] புதிய தகவல் தோன்றும்.

மகரம்: [illegible] மூலம் [illegible] ஏற்படலாம். [illegible] முடிவு [illegible] நிறைவேற்றப் படுவீர்கள். எதையும் சமாளிக்க முடியும்.

கும்பம்: சுற்றுலாவில் உங்கள் வாக்கு வளரும். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். லாபமும் கிடைக்கும்.

மீனம்: அலைமோதும் எண்ணங்கள் உங்கள் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும். சிறிய விஷயமுண்டு. இரவுப் பயணத்தை தவிர்த்துக் கொள்ளவும்.

சோதிட கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## ஆவரங்கால் சனசமூகநிலையத்தில் வாணி விழா

[யாழ்ப்பாணம்]

ஆவரங்கால் சரஸ்வதி சனசமூகநிலையம் வாணி விழாவைக் கொண்டாடியது.

இவ்விழாவில் ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாசாலை அதிபர் திரு. சிவானந்தம், புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

மிருதங்க வித்துவான் திரு. சோமாஸ்கந்தசர்மா, திருமதி தட்சாயனி சிவானந்தசர்மா ஆகியோரதும் அவர்களது மாணவர்களது இசை நிகழ்ச்சிகளும், அச்சுவேலி கல்யாணி விவேகானந்தன் [சின்னமணி] குழுவினரின் வில்லுப்பாட்டும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன. [ச]

## கொக்குவில் கலைமகள் ச. ச. நிலைய வாணி விழா

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் மேற்கு கலைமகள் சனசமூகநிலையம் நேற்று வாணிவிழாவைக் கொண்டாடியது. நிலையத் தலைவர் திரு. ஐ. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்- ஜமுனா
குழந்தையும் தெய்வமும்

வெஸ்லி (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30
சிவாஜி-சரோஜாதேவி
பாலும் பழமும்

நாகம்மாஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30. 9-30
சனி. ஞாயிறு 2-30
நினைத்தாலே இனிக்கும் (கலர்)

REGAL றீகல்
ஐப்பசி 12 வரையும்
தினசரி
10-30, 2-15 4-45, 7-15
9-45
THE MAN WITH THE GOLDEN GUN
தங்க துப்பாக்கியோடிக்கும் மனிதனுடன்
007 ஜேம்ஸ் பொண்ட்

## சீ-நோர்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நில அன்று முதல் இன்று வரை மிகவும் அக்கறை உள்ள திரு. பியட்டொல் ஆனே நிச்சயம் உதவிக்கரம் நீட்டுவார் அவரின் முயற்சியினல் நோர்வே நிதிஉதவி காரைநகருக்கு மீண்டும் கிடைக்கும். இதனைத் தான் இப்பகுதி மக்கள் எம்மிடம் வலியுறுத்தினர்கள். எதிர்பார்க்கின்றர்கள். நாமும் நம்புகின்றோம்.

லாபத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாமல் சேவையே நோக்கமாகக் கொண்டு 42 தொழிலாளர்களுடன் 1. ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சீ-நோர் திட்டம் அழிந்து விடக்கூடாது. விரைவாக வளர்ச்சி கண்டு இன்று தளர் நடைபோடும் இப்பாரிய திட்டத்தை பாதுகாக்க இப்பொழுது தவறிவிட்டால், பின்னர் எந்த நிலையிலும் உயிர்ப்பு முடியாது. முடிந்த கதையாகவே முற்றுப்புள்ளிபெறும்.

நோர்வேநாட்டு நல்லொழுக்க வாலிபர் இயக்கத்தினர் கண்ட கனவு நனவாகும் வகையில் இந்த நிறுவனம் அமைந்துள்ள கிராமப் பகுதிகளில் வேலையற்றிருக்கும் வறிய வாலிபர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தி, பின்தங்கிய கிராமங்களை முன்னேற்றி அபிவிருத்தி செய்து மீன்பிடித்துறையை விருத்தி செய்து ஏழைத்தொழிலாளர்கள் குறிப்பிட்ட சமுகத்தினரின் வாழ்க்கைத்தரத்தை வளமாக்க நல்லிதயம் கொண்டவர்கள் முன்வரவேண்டும்!

காரைநகர் சீ-நோரை நேரில் பார்வையிட கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா இன்று காரைநகர் வருவதாக அறிகின்றோம். நாம் எமது பணியை முடிக்கும் நிலையில் அமைச்சர் தனது பணியை ஆரம்பிக்க முயற்சிப்பதாக எண்ணுகின்றோம். நல்லவை நடக்கட்டும்.

காரைநகர்த் திட்டம் நல்ல படி செயற்பட அமைச்சர் துணிகரமான மாற்றங்களைச் செய்ய வேண்டும். காரைநகர்த் திட்டம் காரைநகரிலேயே இயங்க அமைச்சர் வழிசெய்யவேண்டும். சீர்கேடுகளையும், ஊழல்களையும் குழிதோண்டிப் புதைத்து, நல்லவர்கள் - வல்லவர்கள் திறமையுடன் செயற்பட மாற்றங்கள் செய்து, காரைநகர் சொத்துக்களை காரைநகர் திட்டத்திடமே ஒப்படைக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனைத்தான் நாமும் அழுத்தமாக கூறுகின்றோம் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர், யாழ் அரச அதிபர் ஆகியோர் கவனம் செலுத்துவார்களா?

(முற்றும்)

## ஒரு குழந்தையின் தாய் கடத்தப்பட்டாரா?

[புலோலி]

வயோதிப மாமனுரை வைத்தியசாலைக்குக் கூட்டிச்சென்ற இளம் பெண்ணொருவர் வீடு திரும்பவில்லையாம். பெண்ணின் கணவன் தமது மனைவியைத் தேடிப்பிடித்துத் தருமாறு பொலிஸில் புகார் செய்துள்ளார்.

ஒரு குழந்தையின் தாயான கரணவாய் தெற்கைச் சேர்ந்த திரவியம் பரமேஸ்வரி [வயது 29] என்ற இளம்பெண் தமது வயோதிப மாமனுரை பயில் ட்டி வைத்தியசாலைக்குக் கூட்டிச்சென்றதாகவும், அங்கு அவருக்கு மருந்து எடுத்துக்கொண்டு மாமனுரை வரைக்கும் கொண்டு வந்து பின்பு தொண்டமானுறிலிருந்து மாமனுரை அவ் வாய்க்குச் செல்வதற்கு பஸ்ஸில் ஏற்றிவிட்டுப் பெண் கரணவாய்க்கு வருவதற்காக பஸ்ஸுக்குக் காத்து நின்றதாகவும் பின்னர் அவரைக்காணவில்லை எனவும் பொலிஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பெண்ணை யாராவது கடத்திச்சென்றுள்ளார்களா என்று பொலிசாருக்குச் சந்தேகம் மேற்பட்டுள்ளது. காணமல் போன இவ்விளம் பெண்ணைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

[அ]

## யாழ். லயன்ஸ் உலக சேவைத்தினம்

[யாழ்ப்பாணம்]

உலக சேவைத்தினத்தை யொட்டி யாழ். லயன்ஸ் கழகம் இங்கு நேற்றுக் காலை தென்னங் கன்றுகளை நாட்டியது. கொழும்புத்துறை வயோதிபர் இல்ல வளவிலும் பரி. யோவான் கல்லூரி வளவிலும் நாற்பது தென்னங்கன்றுகளை யாழ். லயன்ஸ் கழகம் நாட்டியது

இச்சேவையை கழகத் தலைவர் லயன் எஸ். செபஸ்தியாம்பிள்ளையும் மற்றும் உறுப்பினர்களும் தமது நேரடிக் கண்காணிப்பில் நடத்தினர்.

[அ]

## வல்லைவெளி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி

சுப்பிரமணியம் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டனர்.

பொலிசார் சந்தேகநபர்களை அடையாளம் காட்டும் சாட்சிகளாக சிறைச்சாலை உத்தியோகத்தர்களான இராஜரத்தினம், சுப்பிரமணியம் ஆகியோரையும் கிருஷ்ணபிள்ளை, மகேந்திரன், தங்கராசா ஆகியோரையும் அழைத்திருந்தனர்

அடையாள அணிவகுப்பின் போது சந்தேகநபர்கள் எவரும் சாட்சிகளால் அடையாளம் காட்டப்படவில்லை. இதனைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் ஐவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நாராயணசாமி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம் வேலும்மயிலும் இச்சந்தேக நபர் இச்சம்பவத்திலீடுபட்டதற்கான சாட்சியங்கள் இல்லாமையினால் அவரை விடுதலை செய்யவேண்டுமெனக் கோரினர். பொலிசார் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்காததபடியால் நீதவான் நாராயணசாமியை விடுதலை செய்து ஏனைய சந்தேக நபர்களை இம்மாதம் 20ம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கம்பர்மலை தங்கலிங்கம் கொலைவழக்கு எதிரிகளும் வல்லைவெளி விளக்கமறியல் கைதிகளின் முக்கொலைச்சம்பவச் சந்தேக நபர்களுமான கந்தையா நாராயணசாமி, நாராயணசாமி அழகேஸ்வரன் ஆகிய இருவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் சரணடைந்ததைத் தொடர்ந்து அவர்களும் இம்மாதம் 20ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இப்படியும் நடக்கிறது

சித்தன்கேணியைச் சேர்ந்த 65 வயதுள்ள ஒரு அம்மையார் மாதாமாதம் விதவை ஓய்வூதியம் [பென்ஷன்] பெற்று வந்தார்.

அவருக்குத் திடீரென நூறுரூபா அதிகரிக்கப்பட்டு கூடுதல் பென்ஷன் கிடைத்தது. முதலில் புரியாவிட்டாலும், ஏதோ ஒரு அதிகரிப்பாக இருக்கலாம் என்று அந்த அம்மையார் அமைதி கொண்டார். நூறு ரூபா அதிகரிப்பு எட்டு மாதங்களாக வழங்கப்பட்டு திடீரென ஒருகடிதம் வந்த போதுதான் அவர் திகைத்துவிட்டார்!

"தவறுதலாக எட்டு மாதங்களும் நூறுரூபா அதிகமாக எண்ணூறு ரூபா வழங்கப்பட்டுவிட்டது. இப்பணத்தை இரண்டு தவணைகளில் கழித்துவிடுகின்றோம்" என்று கடிதத்தில் கூறப்பட்டிருந்தது! அதாவது இரண்டு மாதங்களுக்கு அவருக்குப் பென்ஷன் கிடைக்காது.

திகைத்துப்போன அந்த அம்மையார் தனது குடும்ப நிலையை விளக்கி; மாதம் நூறுரூபா வீதம் கழிக்குமாறு பென்ஷன் பகுதிக்கு மனுச்செய்திருந்தார்.

பகுதித் தலைவர் 'பச்சை விளக்கு' காட்டியும் கணக்காளர் முடியாது என்று கூறிவிட்டாராம். ஒரு அரச ஊழியரின் கவலையீனத்தால் ஒன்றும் தெரியாத அம்மையார் இரண்டு மாதங்களுக்கு வயிற்றை வாயைக் கட்டுவதா?

பழி ஒரு பக்கம்! பாவம் ஒரு பக்கம்!

—'ஊடுருவி.

## காலமானர்

[யாழ்ப்பாணம்]

பிரபல முறிவு நோவு வைத்தியர் ஒட்டகப்புலம் சமத்தர் செல்லத்துரை காலமானர்.

## பெஸ்டஸ்——

(1ம் பக்கத் தொடர்ச்சி]

சீ-நோர எதிர்காலம் குறித்து தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். செயலகத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு நடராசா யாழ் அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோரைச் சந்தித்து சீ - நோர் பற்றி அமைச்சர் விரிவாக ஆராய்வார்.

## சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில்உள்ள சுவீடன் தூதுவராலயத்தைச் சேர்ந்த உயர்அதிகாரி திரு. ஜி. அக்கிசன் யாழ். மாவட்ட சபைத் தலைவரை நேற்றுமுன்தினம் சந்தித்து உரையாடினர்.

யாழ். செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, தமிழ் மக்களின் இன்றைய அரசியல் நிலைகுறித்து நீண்டநேரம் உரையாடப்பட்டதாகத் தெரிகிறது.

[மா]


## மரண அறிவித்தல்

சமத்தர் செல்லத்துரை

ஒட்டகப்புலம், யாழ்ப்பாணம்

[பிரபல முறிவு நோவு வைத்தியர்]

சமத்தர் செல்லத்துரை காலமானர். இவர் காலஞ்சென்ற இராசமணி பொன்னம்மாவின் அன்புக்கணவராவார்.

ஈமக்கிரியை இன்றுவெள்ளிக்கிழமை 9-10-81 மாலை நாலுமணிக்கு நடைபெறும்.

ஒட்டகப்புலம், வசாவிளான்.

1176



## வெளிநாடு பயணமா?

உலகின் எப்பாகத்துக்கு செல்லவேண்டுமானலும்

யாழ்ப்பாணத்தில் எங்களை நாடுங்கள்.

நம்பிக்கையான, பிரபல்யம் வாய்ந்த MACKINNON MACKENZIE & Co of CEYLON LIMITEDன் யாழ்ப்பாணக்கிளை

விரும்பிய விமானத்தில் ஆகக்குறைந்த கட்டணங்களில்

விமான டிக்கட்டுகள்

சிங்கப்பூர் (ஒருவழி) கூட்டாக செல்வோருக்கு மேலும் விசேட கழிவு வழங்கப்படும்.

இலங்கையில் AMERICAN EXPRESS பிரதிநிதித்துவம் பெற்ற மக்கினென்ஸ் இடம் வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் (TRAVELLER CHEQUES) பிரயாண காசோலைகள் பெற்றுக்கொள்ளலாம்.

★ நைஜீரியன் விசா

நைஜீரிய டிக்கட் எம்மிடம் பெறுவோருக்கு மேலும் குறைந்த கட்டணத்தில் விசா பெற்றுத்தரப்படும்

தொடர்பு கொள்க:

மக்கினென்ஸ் ட்றவல் சேர்விஸ் (சிலோன்)லிமிட்.,

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

த. பெ. எண்; 92 தொலைபேசி: 8154



## வெளிநாடுகளில் தொழில்கள்

பெறுவதற்கு ஏற்ற தொழில் நுட்பப் பயிற்சிகள் - வெல்டிங் (Arc & Gas), வயறிங் (I. E. E. முறைப்படி), RADIO OFFICERS (P. M. G) முதலியன.

NATIONAL INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY

57, 59 பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

தம்பையா சிவசுப்பிரமணியம்



யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகரும், கஸ்தூரியார் வீதி மணியம் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான தம்பையா சிவசுப்பிரமணியம் காலமானர். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவயோகராஜன், சிவமலர், ஜீவரஞ்சன், சிவகுமார் [தொலைத் தொடர்பு பரிசோதகர் கொம்பனித்தெரு] சற்குணராசா [யாழ். இந்துக்கல்லூரி] சிவராசகுலம் (யாழ். இந்து மகளிர் கல்லூரி], சிவஞானதேவி [யாழ். இந்து மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தியாகராசா, திருமதி சிவபாக்கியம், யாழ்ப்பாணம் முருகன் ஸ்ரோர்ஸ் பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னரின் பூதவுடல் தகனக் கிரிகைகளுக்காக நாவலர் வீதி, 255-ம் இலக்க அன்னரின் இல்லத்திலிருந்து இன்று வெள்ளிக்கிழமை [9-10-81] மாலை மூன்று மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1183


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக வழிவெளியம், காங்கேசன்துறை வீதி 808ம் இலக்கத்திலுள்ள கலாநிலை அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 9-ம் திகதி அச்சிட்டுப் வெளியிடப்பட்டது. Registered as a News Page The General Post office: Sri Lanka. Regd. Q. B. 10023/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 589, 8186.